1982 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னதாகவே கொடுக்க வேண்டுமென்பதை இந்த அரசு வலியுறுத்தும்.

திரு. கு. ராமணி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள் கேட்டிருக்கக்கூடிய கேள்வி ஒரு முக்கியமான கேள்வி. திருமணத்திற்கு ஒரு மாதம், இரண்டு மாதங்களுக்கு முன்பே திருமணப் பத்திரிகை உட்பட சேர்த்து அனுப்பி வைத்தால்கூட, திருமணம் முடிந்து இரண்டு மூன்று மாதங்கள் முடிந்தபிறகுகூட பணம் கொடுப்பதில்லை. அந்தத் தாமதத்திற்கு என்ன காரணம்? அந்தத் தாமதத்தைத் தவிர்த்து, திருமணத்திற்கு 1 வாரம், அல்லது 10 நாட்களுக்கு முன்னதாகவே கேட்ட கடனைக் கொடுப்பதற்குரிய உத்தரவாதத்தை அந்த பி. எஃப். காரியாலயம் மூலமாக அளிக்க, அமைச்சர் முன் வந்து நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த உணர்வுகளை (Sentiments expressed by the Hon. Members) கருத்திலே கொண்டு, இன்றைய தினம் அதிகாரிகளுக்கு தொலைபேசி மூலமாகச் சொல்லி தாமதத்தைத் தவிர்க்க ஏற்பாடு செய்யப்படும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பெண்கள் பணியாற்றும் தொழிலகங்களில் குழந்தைகள் காப்பகம் நிறுவும் திட்டம்.

*வினா எண். 134—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகுக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெண்கள் பணியாற்றும் எல்லாத் தொழிலகங்களிலும் குழந்தைகள் காப்பகம் நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தொழிற்சாலை சட்டத்தின் பிரிவு 48-ன்படி முப்பதும் அதற்கு மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் பணியாற்றும் தொழிற்சாலைகளில் குழந்தைகள் காப்பகம் நிறுவப்பட வேண்டும். அத்தகைய தொழிற்சாலைகளில் குழந்தைகள் காப்பகம் நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. குமரி அனந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, 30 பெண் தொழிலாளர்களுக்கு மேலே இருக்கிற அத்தனை தொழிற்சாலைகளிலும் காப்பகங்கள் அமைக்கப்பட வேண்டுமென்பது விதிமுறையாக இருக்கும்போது, தமிழ்நாட்டில் அப்படி எத்தனை தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன

என்பதையும் அமைக்கப்படாத தொழிற்சாலைகள் எத்தனை என்பதையும் அப்படி அமைக்கப்படாத தொழிற்சாலைகளில் உடனடியாக அமைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுமா என் பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தமிழ் நாட்டில் உள்ள பெண்கள் பணியாற்றும் தொழிற்சாலைகளின் மொத்த எண்ணிக்கை 3,747. இவைகளில் 732 தொழிற்சாலைகளில் குழந்தைகள் காப்பகம் அமைக்கப்பட வேண்டும். முப்பதும் அதற்கு மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் பணியாற்றும் தொழிற்சாலைகளில் குழந்தைகள் காப்பகம் தொழிற்சாலை சட்டத்தின் பிரிவு 48-ன்படி நிறுவப்பட வேண்டும். இவற்றில் 353 தொழிற்சாலைகளில் குழந்தைகள் காப்பகங்கள் அமைக்கப் பட்டுள்ளன. எஞ்சிய 379 தொழிற்சாலைகளில் குழந்தைகள் காப்பகம் அமைக்க தொழிற்சாலை ஆய்வாளர்களால் தக்க நட வடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

1–1–1980 முதல் 31–12–1981 முடிய 171 வழக்குகள் நீதி மன்றத்தில் தொடரப்பட்டுள்ளன. அதில் 125 வழக்குகளில் உரிமையாளர்கள் தண்டிக்கப்பட்டார்கள். 3 வழக்குகள் வாபஸ் பெறப்பட்டுள்ளன. இரண்டு நிர்வாகத்தினர் குழந்தை கள் காப்பகம் அமைத்துவிட்டதாலும் மூன்றாவது நிர்வாகம் புதிய தொழிற்சாலையாக இருப்பதாலும், முந்தைய இரு ஆய்வு களின்படி வழக்குகள் தொடரப்பட்டதாலும் வழக்குகள் வாபஸ் பெறப்பட்டன. 40 வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. குழந்தைகள் காப்பகம் அமைக்காத தொழிற்சாலை களின் பேரில் காரணம் காட்டும் அறிக்கை அனுப்பப்பட்டு நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. குமரி அனந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு தொடர்பான, கோர்வையான பதிலை அளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஏற் கனவே அமைக்கப்பட்ட காப்பகங்களிலே உள்ள குழந்தைகளுக்கு முறையான மருத்துவ வசதி அளிக்கப்படுகிறதா, ஊட்டச் சத்து கொடுக்கப்படுகிறதா என்பதையெல்லாம் பார்வையிட அரசாங்கத்தினுடைய ஏற்பாடு இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் முக்கியமான, நல்ல கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இதற் காக உள்ள ஆய்வாளர்கள் அடிக்கடி சென்று பார்க்கிறார்கள். அப்படி பார்ப்பதன் விளைவாகத்தான் 'பிராசிக்யூஷன்ஸ்' நடந் திருக்கின்றன. இருந்தாலும், அதிலே மிக விரைவாகச் செல்ல முடியாததற்குக் காரணம், தொழிற்சாலை சட்டம் 48-ன் கீழ் அவை அமைக்கப்பட வேண்டும். 92-வது பிரிவில், அதற்கான

தண்டனை பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. தண்டனை 3 மாதம் அல்லது ரூ. 2,000 என்றுதான் இருக்கிறது. கூடுமான வரையில் அபராதத்தை அதிகமாகப் போடுவதில்லை. ஒரு வேளை, சட்டத்தைத் திருத்தி, தண்டனையைக் கொஞ்சம் கடுமையாக்கினால், அந்த எண்ணம் விரைவிலே நிறைவேறும் என்று அரசு கருதுகிறது. சட்டத்தைத் திருத்தி, மாற்றி, உபயோகமான சட்டமாகக்கொண்டு வருவதற்காக ஒரு குழு அமைத்திருக்கிறோம். அந்தக் குழு இதைப் பரிசீலனை செய்து, அதிலே தண்டனை அதிகம் இருக்க வேண்டும், அல்லது வேறு விதமாக இருக்க வேண்டுமென்று பரிந்துரை செய்யுமானால் அதை கவனிக்கலாம். அப்படி பரிந்துரை செய்யவில்லையென்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களை மனதிலே வைத்து, இந்த அரசு அதைத் தீவிரமாகப் பரிசீலிக்கும்.

திரு. ந. குலசேகர பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர், வாணியம்பாடி பகுதிகளில், 'ஷூ பாக்டரிகள்' இருக்கின்றன. அந்த பாக்டரிகளில் ஆயிரம், இரண்டாயிரம் பெண்கள் வேலை செய்கின்றார்கள். அந்தத் தனியார் நிறுவனங்களிலும் இதுபோன்று குழந்தைகள் காப்பகங்களை நிறுவ அரசு முன்வந்து ஆணை பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைச் சட்டம் உள்ள எல்லா இடங்களிலும்—அதற்காகத்தான் 732 தொழிற்சாலைகள் என்று சொன்னேன்—இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். நாங்களும் பரிசோதனை செய்து பிராசிக்யூஷன் செய்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் மட்டுமல்ல, நான் இந்த மன்றத்திலே இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்கிறேன். ஏதாவது ஒரு குறிப்பிட்ட இடத்தில் இதைச் செய்யவில்லை என்ற விவரத்தை அரசுக்குத் தெளிவாக அனுப்பினால், உங்களுக்கு வரக்கூடிய புகார்களையும் அரசுக்கு அனுப்பினால், அதைக் கவனிக்க அரசுக்கு உதவி செய்தவர்களாவீர்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 150-க்கும் மேற்பட்ட முந்திரி ஆலைகள் இருக்கின்றன. அவைகளில் ஆயிரக்கணக்கில் பெண் தொழிலாளர்கள்தான் வேலை செய்கிறார்கள். அங்கே எந்த இடத்திலும் இத்தகைய குழந்தைகள் காப்பகம் அமைக்கப்படவில்லை. அவைகளை உடனடியாக அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து அவர்களுக்குக் கட்டளை பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக சர்ப்ரைஸ் செக் செய்வதற்கு ஏற்பாடு செய்கிறேன்.